செ.வெ.எண் : 16/ ஜூலை நாள் : 07.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

# சுயதொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு மானியத்துடன் தொழில் துவங்குவதற்கான சிறப்பு ஆலோசனை முகாம் நடைபெறவுள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர் சுயதொழில் துவங்குவதற்கு மானியத்துடன் தொழில் துவங்கிட ஆலோசனை சிறப்பு முகாம் 11.07.2017 அன்று சாயல்குடியில் பதனிர் மகாலிலும், 19.07.2017 அன்று தங்கச்சிமடத்தில் உள்ள சமுதாய கூடத்திலும், 21.07.2017 அன்று நயினார்கோயில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் 25.07.2017 அன்று திருவாடானை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

நமது மாவட்டத்தை தொழில் வளர்ச்சியில் உச்சத்தை தொட வைக்க மாவட்ட தொழில் மையம், இராமநாதபுரம் இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர் சுயதொழில் துவங்குவதற்கு மானியத்துடன் கூடிய பல கடன் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில், உற்பத்தி தொழில்களுக்கு 25% மானியத்துடன் அதிகபட்ச முதலீடு ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் 35% மானியத்துடன் கூடிய பாரத பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் (PMEGP) உற்பத்தி தொழிலுக்கு அதிகபட்ச திட்ட முதலீடு ரூ.25 இலட்சமும் சேவைத் தொழிலுக்கு அதிகபட்ச திட்ட முதலீடு ரூ.10 இலட்சமும் உள்ள தொழில்களுக்கு வங்கிகளின் மூலம் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. தமிழக அரசின் சிறப்பு திட்டமான புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தில் (NEEDS) அதிகபட்ச மானியமாக 25 இலட்சம், 3% வட்டி மானியத்துடன் அதிகபட்ச திட்ட முதலீடாக ரூ.1 கோடி வரை வங்கிகளின் மூலம் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கூறிய கடன் திட்டங்கள் பற்றிய விளக்கங்கள் பெறவும் வாய்ப்புள்ள தொழில்களை தேர்ந்தெடுத்து தொழில் தொடங்கிடவும் தொழில் ஆர்வமுள்ள தொழில் முனைவோர் ஆலோசனை பெறும் பொருட்டு சிறப்பு முகாம்கள் 11.07.2017 அன்று சாயல்குடி, பதனீர் மகாலில் காலை 10.00 மணி அளவிலும், 19.07.2017 அன்று தங்கச்சிமடம், சமுதாய கூடத்தில் காலை 10.00 மணி அளவிலும், 21.07.2017 அன்று நயினார் கோயில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் காலை 10.00 மணி அளவிலும், 25.07.2017 அன்று திருவாடானை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் காலை 10.00 மணி அளவிலும் நடைபெற உள்ளது.

சுய தொழில் தொடங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர் தங்களுடைய கல்வி சான்றிதழ்கள், ஆதார் அட்டை, குடும்ப அட்டை, விலைப்புள்ளி, திட்ட அறிக்கை, சாதி சான்றிதழ் ஆகியவற்றின் இரு நகல்களுடன் மேற்கூறிய தினங்களில் வருகை தந்து வாய்ப்புகளை பயன்படுத்தி தொழில் துவங்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**